**வாக்குமூலம்**
**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி**
**சி.சி.எண்.127/18**
**வழக்கு சாட்சி – அ.சா.3**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | லோகமணி | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | அழகர்சாமி | தொழில் | வீட்டு குடித்தனம் |
| கிராமம் | கோடாங்கிபட்டி | சமயம் | |
| தாலுக்கா | போடி | வயது | 61 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 22.02.24

**( 1ம் எதிரி இறந்துவிட்டார். 2ம் எதிரி ஆஜர். 3 முதல் 6 எதிரிகள் ஆஜர் இல்லை. 3 முதல் 6 எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

ஆஜர் எதிரியை தெரியும். அசா1 எனது மகன். அசா2 எனது கணவர். பரமகுருவிடம் நாங்கள் பணம் வாங்கியிருந்தோம். அதற்குரிய வட்டியை 2 மாதம் கொடுக்கவில்லை. வட்டி கேட்டு செல்வம் அவரது அப்பா, அம்மா, சொந்தம் பந்தம் ஆகியோர் எங்கள் வீட்டிற்கு வந்து எங்களுடன் சண்டை பிடித்து அடிதடி வந்துவிட்டது. அது சம்மந்தமாக காவல்நிலையத்தில் புகார் கொடுத்தோம்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் முதல்விசாரணையில் கூறியுள்ள விபரத்தை தான் போலிச்விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் போலிசார் என்னை விசாரிக்கவில்லை. நான் சொன்னது போல் எதிரிகள் எங்கள் வீட்டிற்கு வந்து சண்டை போடவில்லை என்றாலும் என் மகன் செல்வத்திற்கு கடனை திருப்பி கொடுக்க கூடாது என்ற எண்ணத்தில் பொய் புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.